## 29.6 ஊராட்சி உதவியாளர்/பகுதி நேர எழுத்தர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தை உயர்த்துதல்

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண்.86 நாள் : 8.5.1998

படிக்க :

அரசாணை நிலை எண். 230, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 15.10.1996.

**ஆணை**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ன்படி ஊராட்சிகளின் கடமைகள், அதிகாரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஊராட்சித் தலைவர்களுக்கு உதவியாகப் பணி அமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள், அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஊதிய அளவு, ஊராட்சி உதவியாளர்கள் காலச்சம்பள ஏற்றமுறையில் ஊதியம் கோரியுள்ளது ஆகியவை குறித்து அரசு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு அரசாணை எண். 230, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 15.10.1996 ல் ஆணையிட்டுள்ளது,

(அ) தற்போது பணியிலிருக்கும் ஊராட்சி உதவியாளர்கள் தொடர்ந்து பணியில் இருக்கலாம். இவர்களுக்கு தற்போது மதிப்பு ஊதியம் ரூ.400/– (ரூபாய் நானூறு மட்டும்) அளிக்கப்பட்டு வருவதை ரூ.650/– (ரூபாய் அறநூற்று ஐம்பது மட்டும்) ஆக உயர்த்தப்படுகின்றது.

(ஆ) தற்போது ஊராட்சி உதவியாளர்கள் இல்லாத ஊராட்சிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு பகுதி நேர எழுத்தர்களைப் பணியமர்த்த ஊராட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது. பகுதிநேர எழுத்தர்களுக்கு தொடர்புடைய ஊராட்சிகளின் மக்கள் தொகையின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகைக்கு மிகாமல் ஒவ்வொரு மாதமும் மதிப்பு ஊதியம் வழங்கலாம்.

| ஊராட்சியின் மக்கள் தொகை | மதிப்பூதியம் |
|---|---|
| 5000 த்தை விட கூடுதல் | ரூ.550/– |
| 4001 முதல் 5000 வரை | ரூ.500/– |
| 3001 முதல் 4000 வரை | ரூ.450/– |
| 2001 முதல் 3000 வரை | ரூ.400/– |
| 2000 மற்றும் 2000 க்கு குறைவு | ரூ.350/– |

2. ஊராட்சி உதவியாளர்கள் / பகுதிநேர எழுத்தர்களுக்கு வழங்கப்படும் மதிப்பு ஊதியத்தை உயர்த்துதல் தொடர்பாக அரசு கவனமாக ஆராய்ந்தது. அதனடிப்படையில் தற்போது ஊராட்சி உதவியாளர்களுக்கு மதிப்பு ஊதியம் ரூ.650/– அளிக்கப்பட்டு வருவதை, ரூ.750/– (ரூபாய் எழுநூற்றி ஐம்பது மட்டும்) ஆக உயர்த்தப்படுகின்றது.

3. தற்போது பகுதிநேர எழுத்தர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்தை மாற்றி கீழ்க்கண்டவாறு மதிப்பூதியம் வழங்கலாம் என அரசு ஆணையிடுகின்றது.

| ஊராட்சிகளின் மக்கள் தொகை | மதிப்பூதியம் |
|---|---|
| 2000 மற்றும் 2000 க்கு குறைவு | ரூ.450/– |
| 2001 முதல் 3000 வரை | ரூ.500/– |
| 3001 முதல் 4000 வரை | ரூ.550/– |
| 4001 முதல் 5000 வரை | ரூ.600/– |
| 5000 த்தை விட கூடுதல் | ரூ.650/– |

4. இந்த செலவினம் பஞ்சாயத்து பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

5. இந்த ஆணை, நிதித் துறையின் 29.4.1998 நாளிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 1771/எப்.எஸ்/பி/98 ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**

அரசு செயலாளர்